


அ.எண். 269,2015

தேதி. 09.11.2015

## ச.ம.க. நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ. அவர்களின் தீபாவளி வாழ்த்துக்கள்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் பேணிக்காப்பது நமது நாட்டின் அடிப்படைத் தத்துவங்களான மதசார்பின்மையும், சகிப்புத் தன்மையும் தான். ஆனால் சமீப காலங்களில் மதச்சார்பின்மைக்கும், சகிப்புத்தன்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் பேச்சுக்களும், செயல்களும் அச்சுறுத்தலையும், வேதனையையும் அளிப்பதாக உள்ளன.

ஒரு மதம் சார்ந்த சிறப்பான பண்டிகைகள் கொண்டாடப்படும் போது மற்ற மதத்தினர் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வதே நமது பாரத கலாச்சாரத்தின் அடிப்படையும் ஆணிவேரும் ஆகும். அந்த அடிப்படைப் பண்புகள் இந்த இனிய தீப ஒளித் திருநாளில் மேன்மேலும் தழைத்தோங்க வேண்டும். கலாச்சாரத்தை மூழ்கடிக்கும் இருளை விரட்டும் நன்னாளாக இந்த தீப ஒளித் திருநாள் அமைய வேண்டும் என்ற வகையில் தமிழகம் மட்டும் நாடுமுழுவதும் அனைவருக்கும் என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி, வணக்கம்,

உழைப்பவரே உயர்ந்தவர்,

என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,

தலைவர்.